# தாக்குதலைத் தொடர ஆர்ஜென்ரீனுவிடமிருந்து ஆறு போர் விமானங்களை அரசு கொள்வனவு

(கொழும்பு)
வடக்கு கிழக்குப் பகுதிகளில் போரைத்தொடர்ந்து நடாத்துவதற்கு ஆர்ஜென்ரீனு விடமிருந்து 75 கோடி ரூபா செலவில் ஆறு போர்விமானங்களை அரசு கொள்வனவுசெய்ய

(4-ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 01 இதழ் 279
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 16 — 11 — 1992


## மழை, சூருவளியினால் 50,000 பேர் பாதிப்பு

(கொழும்பு)
கடந்த சில தினங்களாக நாடு முழுவதிலும் கொட்டிய மழையாலும், சூருவளியினாலும் 6 மாகாணங்களில் சுமார் 50,000 ற்கும் மேற்பட்டோர் பாதிப்புற்று அகதிகளாகியுள்ளனர்.
மட்டக்களப்பு மாவட்டத்

(4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள்

(கொழும்பு)
இலங்கையின் முதலாவது 'எக்ஸ்போ-92' கண்காட்சியை முன்னிட்டு கொழும்பு நகரிலும், சுற்றுப்புறங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக

(4ம் பக்கம் பார்க்க)

★ தெரிவுக்குழு புலிகளுடன் பேச்சு நடத்தாமல் —

# இனப்பிரச்னைக்கான தீர்வு எதையும் உருவாக்க முடியாது

## பி. பி. ஸி. கருத்து

(லண்டன்)
விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாதநிலையில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினுல் இனப் பிரச்னைக்கு ஒரு இணக்கமான-அமைதியான தீர்வை உருவாக்கமுடியாதென பி.பி-ஸி. தெரிவித்தது.

(4ம் பக்கம் பார்க்க)

## ★ ஹமீத்தின் வேண்டுகோளுக்கிணங்க 'குவேக்கர்ஸ்' குழு மீண்டும் புலிகளுடன் பேச்சுநடத்தும்!

(கொழும்பு)
விடுதலைப்புலிகளுடன் குவேக்கர்ஸ் சமாதானக்குழு மற்றொரு சுற்றுப் பேச்சுக்களை நடத்தலாமென தெரிவிக்கப்படுகிறது. அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத்தின் அறிவிப்பையடுத்து
கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த 'குவேக்கர்ஸ்' சமாதானக்குழு

(4ம் பக்கம் பார்க்க)

## ★ யாழ்ப்பாணத்தை கைப்பற்றுமல் யுத்தத்தைத் தொடர்வதில் அர்த்தமில்லை

(கொழும்பு)
போர் ஆரம்பித்து இரண்டு வருடங்களாகியும், யாழ்ப்பாணத்தைப் படையினரின் கட்டுப்பாட்டில் கொண்டுவர முடியாத நிலையில் யுத்தத் தைத் தொடர்வதில் அர்த்தமில்லையென, இராணுவ ரீதியாக யுத்தமுனையில் நேரடி அனுபவம் பெற்ற உயர்மட்ட அதிகாரிகள் பலர் கருத்து

(4ம் பக்கம் பார்க்க)

## மண்மீட்பு நிதி மீளளிப்பு தொடர்ந்து நடைபெறும்

### தமிழேந்தி தகவல்

(யாழ்ப்பாணம்)
மீட்பு நிதி கடன் மீளளிப்பு தொடர்ந்து நடைபெறுமென்று தமிழீழ விடுதலைப் புலிகள் நிதிப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தி தெரிவித்துள்ளார்.
இதுவரை காலமும் 1,400 பேருக்கு மீட்பு நிதி மீளளிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:
"1990 நவம்பரில் 100 பேருக்கும், 1991 மாவீரர் வாரத்தில் 1,100 பேருக்கும், 1992 பெப்ரவரியில் 200 பேருக்கும் மீட்பு நிதி மீளளிப்புச் செய்யப்பட்டுள்ளது மேலும் இவ்வருட மாவீரர் வாரத்தில் 1,000 பேருக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

தாயகத்தோடு சங்கமமே யாகிவிட்ட தூயவர்கள் மாவீரர் துதி

## போர் நிறுத்த முயற்சி தடைப்பட்டுவிட்டன

(கொழும்பு)
குவாக்கர்ஸ் சமாதானக் குழுவினர் போர் நிறுத்தம் கொண்டு வருவதற்கு எடுத்த முயற்சிகள் தடைப்பட்டுள்ளதாக 'சண்டேரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்

(4-ம் பக்கம் பார்க்க)

## எம்மை எமக்கே உணர வைத்தவர்கள் மாவீரர்

(யாழ்ப்பாணம்)
நாம் நாடோடிகள் அல்ல. நிரந்தரமாய்க் குந்தவொரு நிலமற்ற ஏதிலிகளுமல்ல. இடித்துரைத்தவர்கள்மாவீரர்கள். "எமக்கென்றொரு பாரம்பரிய பிரதேசமுண்டு.

(4ம் பக்கம் பார்க்க)

## மாவீரர் எழுச்சி நாள் கருத்தரங்கும், சிரமதானமும்

(யாழ்ப்பாணம்)
மாவீரர் வாரத்தை முன்னிட்டு யாழ். குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் எழுச்சி வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.
இவ் எழுச்சி வாரத்தில் இன்று கோட்ட மட்டத்தில் வட்டவை பிரதேசம் தோறும்

(4-ம் பக்க பார்க்க)

## கிழக்கு படை முகாம்களுக்கு அமைச்சர், எம். பி.க்கள் தளபதிகள் சகிதம் விஜயம்

(கொழும்பு)
கிழக்கு மாகாணத்தில் படை முகாம்களில் படையினரின் வசதிகள் பற்றி ஆராய வெளிவிவகார ராஜாங்க அமைச்சர் திரு. ஜோன் அமரதுங்க நாடாளுமன்ற எம் பிக்

(4-ம் பக்கம் பார்க்க)

## பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும்

(கொழும்பு)
இனப்பிரச்னைக்கு பேச்சு வார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்று இலங்கையிலுள்ள பல

(2-ம் பக்கம் பார்க்க)

## தமிழருக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும்

(கொழும்பு)
தமிழருக்கான உரிமைகள் கட்டாயம் வழங்கப்படவேண்டும் என்று லங்கா சமசமாஜக்கட்சி பொதுச்செயலாளர்

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### வைத்திய நிலையம்

வேலணையூர் நடனமுருகன் வைத்தியநிலையம் தற்பொழுது சத்திரச் சந்தி கொட்டடி ரோட், யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகின்றது டாக்டர் கந்தையா நவரத்தினம். [சி-6958

### முதலாம்பிள்ளை

பரிசளிப்பதற்கேற்ற, சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற நூல் அராலியூர் சுந்தரம்பிள்ளை எழுதிய முதலாம்பிள்ளை 30 ரூபா கழிவு 20 வீதம் 30, கலடயிற்சுவாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (சி-6963)

## குடிநீர் வழங்க ஏற்பாடு

நல்லூர்)

கொழும்புத்துறை உள்புக்குளம் பிள்ளையார் கோவிலுக் கண்மையில் யுனிசெவ் உதவியுடன் கூட்டப்பட்ட குடிநீர் திட்டம் அண்மையில் ஆரம்பிக்கப்படவுள்ளது இத்திட்டத்தைப் பயன்படுத்தி 15 குழாய்கள் மூலம் குடிநீர் வழங்க யாழ். மாநகர சபை நீர்வேலைப் பகுதி ஏற்பாடுகளை செய்துள்ளது. (158)

### விற்பனைக்கு

வியாபாரிகள் தங்கள் வியாபார ஸ்தாபனத்தை விளம்பரம் செய்வதற்கு தேவையான கலண்டர்கள் எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் தகுந்த கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம். அச்சுப்பதிவு செய்யப்படாத கலண்டர்கள், சிலிப்புல விற்பனைக்குண்டு. ஸ்ரீகாந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். [எ—2588]

## செஞ்சோலை வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலும் நடாத்தப்பட்டு பாராட்டுதல்களைப் பெற்றுக் கொண்ட 'செஞ்சோலை' பாடல்களின் ஒலிப்பதிவு நடா வெளியீட்டு விழா இம்மாதம் 19-ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் வாழ்த்துரைகள், சிறப்புரைகள், மதிப்பீட்டுரைகள் என்பனவற்றுடன் கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவிருக்கின்றது.

## இராசி பலன்

**16-11-1992**

**திங்கட்கிழமை**

**(தமிழுக்கு கார்த்திகை 1)**

ஷஷ்டி காலை 8-35 வரை, பூசம் பி. ப 4-29 வரை, மரணயோகம், கரிநாள், இராகுகாலம் காலை 7-38 முதல் 9-08 வரை சுபநேரம், பகல் 12-08 முதல் 1-38வரை.

மேஷம்: நம்பிக்கைக் குறைவு, புத்திர சஞ்சலம், அசதி.

இடபம்; தொழில் சிறப்பு, அறிஞர் சந்திப்பு, பணவரவு.

மிதுனம்: கருத்து மோதல், பணந்தசராறு, அலைச்சல்.

கடகம்: குடும்ப சந்தோஷம் இனசன வருகை, காரியசித்தி.

சிங்கம்: எதிர்பார்த்தவை கைகூடாமை, சோம்பல் வெறுப்பு.

கன்னி: வசதி வாய்ப்பு, தொழில் லாபம், பொதுஜன உதவி.

துலாம்: நண்பர் உதவி, விருந்து வைபவம், பயண அநுகூலம்.

விருச்சிகம்: நிர்ப்பந்தம், சரீரப் பிரயாசை, வேதனை.

தனுசு: சிந்தை குழப்பம், மனக்கவலை, தப்பபிப்பிராயம்

மகரம்: உறவினர் சந்தோஷம், பெரியவர் ஆசி, அந்நியர் உதவி.

கும்பம்: ஆசை நிறைவேறும், காரிய பாதம் பாராட்டு.

மீனம்: தாழ்ந்தநிலை, எதிலும் குழப்பம், சோகம்.

— ஜோஸ்யர்

# அடையாள அட்டைப் படம்

தேசிய அடையாள அட்டைப்படம் பிடிக்க ரூபா 40/-. விரைவாக வழங்கப்படும்

## குகன் ஸ்ரூடியோ

பருத்தித்துறை

(எ 2580)

## ஈராண்டு நினைவஞ்சலி



**அமரர் குழந்தைவேலு தங்கராசா**

மலர்வு: **14-02-1949** உதிர்வு: **25-10-1990**

**திதி: 16-11-1992**

உயிர் தந்தாய், உதிரம் தந்தாய்
உயர்வான வாழ்வு தந்தாய்
என்றும் உம்மை மறவாதிருக்க
உள்ளம் நிறைந்த பாசம் தந்தாய்

நின் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (சி-6975)

## பருத்தித்துறை பிரதேச சபை
## புலோலி

# 1993-ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

பருத்தித்துறை பிரதேச சபையின் புலோலி, குடத்தனை, செம்பியன்பற்று ஆகிய நிர்வாகப் பிரதேசத்திற்கு உட்பட்ட கீழ் குறிக்கப்பட்ட சந்தைகள், மாட்டிறைச்சிக் கடைகள், ஆட்டிறைச்சிக் கடைகள் ஆகியவற்றிற்கான சீல் வைத்த கேள்விகள் 3-12-92-ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றிற்கான கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் கீழ் குறிப்பிட்டுள்ள கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப்பத்திரப் பணத்தையும் 18-11-92-ம் திகதியில் இருந்து 30-11-92-ம் திகதி வரை நண்பகல் 12 மணி வரை தலைமை அலுவலகத்தில் பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். மேலும் தேவையான விபரங்களையும், நிபந்தனைகளையும் தலைமை அலுவலகத்திலும், உப அலுவலகத்திலும் அறிந்துகொள்ளலாம்.

**சி. முருகேசபிள்ளை**
விசேட ஆணையாளர்,
பருத்தித்துறை பிரதேச சபை.

பருத்தித்துறை பிரதேச சபை,
தலைமை அலுவலகம்
புலோலி, 10-11-1992.

| | குத்தகை விபரம் | | ஏற்றுக்கொள்ளப் படக்கூடிய தொகை | கேள்வி வைப்புப் பிணை | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01. | கிராமக்கோட்டுச் சந்தை | | 2200-00 | 100-00 | 50-00 |
| 02. | கற்கோவளம் சந்தை | | 850-00 | 100-00 | 50-00 |
| 03. | மாயக்கைச் சந்தை | | 1000-00 | 100-00 | 50-00 |
| 04. | புலோலி மந்திகைச் சந்தை | | 1600 00 | 100-00 | 50-00 |
| 05. | மாணன்டிச் சந்தை | | 6600-00 | 100-00 | 50-00 |
| 06. | கொடிகாவில் சந்தை | | 525-00 | 100-00 | 50-00 |
| 07. | மருதங்கேணிச் சந்தை | | 5000-00 | 500-00 | 100-00 |
| 08. | கிராமக்கோட்டுச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | | 16,500-00 | 500-00 | 100-00 |
| 09. | அல்வாய் வடக்கு நாவலடி | ,, | 27,500-00 | 500-00 | 100-00 |
| 10. | மந்திகைச் சந்தை | ,, | 2200-00 | 500-00 | 100-00 |
| 11. | பொலிகண்டி ஆலடி | ,, | 2750-00 | 500-00 | 100-00 |
| 12. | மந்திகைச் சந்தை மாட்டிறைச்சிக் கடை | | 55,000-00 | 1500-00 | 100-00 |
| 13. | மாணண்டி | ,, | 33,550-00 | 1500-00 | 100-00 |
| 14. | கற்கோவளம் | ,, | 20,000-00 | 1500-00 | 100-00 |
| 15. | நாகர்கோவில் | ,, | 20,000-00 | 1500-00 | 100-00 |
| 16. | மணல்காடு | | 10,000-00 | 1500-00 | 100-00 |

(ஏ-2592)

### அரசினர் பொது (போதனு) வைத்தியசாலை
### யாழ்ப்பாணம்

## கேள்வி விளம்பரம்

## சலவை ஒப்பந்தம் - 1993

யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையின் அழுக்குத் துணிகளை 01-01-1993 தொடக்கம் 31-12-93 வரை சலவை செய்வதற்காக கேள்விப்பத்திரங்கள் 27-11-1992 காலை 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் உரிய பத்திரங்களில் இரு பிரதிகளாக நிரப்பி அனுப்பப்படல் வேண்டும். எனது பெயருக்கு ரூபா 150/ஐ வைத்தியசாலைக் காரியாலயத்தில் செலுத்தி கேள்விப்பத்திரங்களைக் பெற்றுக்கொள்ளலாம.

கேள்விப்பத்திரங்கள் நேரில் ஒப்படைக்கப்பட்டால் ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டு வழங்கப்படும். ஒப்பந்தக்காரர் விரும்பினால் கேள்விப்பத்திரங்களை பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம்.

கேள்விப்பத்திரங்களை அவைகள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதிக்கு முதல் நாள் நண்பகல் 12-00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம் கேள்விகள் என்னால் வழங்கப்படும் அதற்குரிய பத்திரங்களில் இல்லாவிடில் நிராகரிக்கப்படும. முடிவுத்திகதியன்று காலை 10-00 மணிக்குப் பின்வரும் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரர் பிணைப்பணமாக ரூபா 1500/- செலுத்தி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் வேண்டும். ஏற்றுக்கொள்ளப்படாத கேள்விப் பத்திரங்களின்மேல் செலுத்தப்பட்ட பணம் ஒப்பந்தம் கைச்சாத்தாகியதும் திருப்பிக் கொடுக்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 27-11-92 காலை 10 மணிக்கு எமது காரியாலயத்தில் திறக்கப்படும்போது கேள்விதாரர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ பிரசன்னமாயிருக்கவேண்டும்.

மேலதிக விபரங்களை இவ்வைத்தியசாலையின் கணக்காளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**வைத்தியக் கலாநிதி**
**(செல்வி) ந. கனகரத்தினம்**
பணிப்பாளர்
அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். 1992-11. (எ—2586)

# தேசமெங்கும் சோதியாய் நிற்பவரே மாவீரராவார்

தேச விடுதலைக்காகத் தமை முழுமையாக அர்ப்பணித்தும் எதிரி பாசறையை வெடிகுண்டு தகர்த்தும் சத்திய வேள்வியில் நித்தமும் வேங்கை கொடியது பறந்திட உயிரினை ஈய்ந்து உடலை உரமிட்டு செங்குருதியால் வரலாறு படைத்து தமிழீழ மண்ணெங்கும் நினைவுச் சிலைகளாய், ஓவியமாய் வெள்ளை மலரேந்திய வேதிகளாய் ஈழமண்ணில் புதுவிதையாய் விடுதலையின் தீச்சுடராகி தேசமெங்கும் சோதியாய் நிற்பவரே மாவீரராவார்.

தமிழ் இன விடிவுக்காய் மரணித்தவர்கள் தேசம் தூங்கியபோது விழித்திருந்தவர்கள். உணர்வுத்தீக்காய் தமக்குள்ளே சிறைபோட்டவர்கள். தேச மக்களின் பாசப் பிணைப்புகளுக்காக தமது பாசங்களைப் பொசுக்கியவர்கள் பள்ளிப்பராயத்தை பள்ளித் தோழருக்காய் பறிகொடுத்தவர்கள். ஊரெல்லாம் உறங்கும் வேளை உறக்கமின்றி விழித்தவர்கள் எல்லை சுற்றி வேலிச்சிலையாய் நின்றவர்கள். தமது மக்களுக்காய் காலைகளை, கரங்களை இழந்து நின்றவர்கள்.

தேச விடுதலைக்காக மரணித்த மாவீரர்களுக்கு தமிழீழ மண்ணில் மாவீரர் நாள் உறுதிப்பாடாயிற்று. இவ் எழுச்சி நாளே தமிழீழத்தின் தேசிய நாளாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. விடுதலைப் புலி வீரர்களில் முதலாவதாக வீரச்சாவெய்திய மாவீரர் சத்தியநாதனின் (சங்கர்) நினைவுநாளை நவம்பர் 27 ஐ தமிழீழ தேசம் மாவீரர் நாளாகப் பிரகடனம் செய்துள்ளது.

வருடம் தோறும் இப்புனித நாளினை தமிழினம் உணர்வு பூர்வமாகக் கொண்டாடுகிறது. நினைவு கூருகிறது.

மாவீரர் நாளானது மாவீரர் வாரமாக தமிழீழமெங்கும் கொண்டாடப்படுகிறது. எழுச்சி மிகுந்த இந்த மாவீரர் வாரமானது நவம்பர் 21ல் தொடங்கி நவம்பர் 27ல் முடிவடைகின்றது. இம் மாவீரர் வாரத்தினைக் கொண்டாடும் முகமாக நவம்பர் 21ம் நாளுக்கு முன்னதாகவே தமிழீழமெங்கும் புனிதப்பட்டுவருகிறது. மாவீரர் தூபிகள், நிழற்படங்கள் அமைந்த இடங்கள், இல்லங்கள், ஒழுங்கைகள், வீதிகள், கல்விக்கூடங்கள், பொதுஇடங்கள், காரியாலயங்கள் அனைத்தையுமே மக்கள் அனைவரும் தனித்தும் ஒருமித்தும் புனிதமாக்கி விடுகின்றனர். இவையாவும் மாவீரர் நினைவாக அலங்கரிக்கப்பட்டு தமிழீழ நாடு புதுப் பொலிவுடன் விளங்கும்.

★ இளைய தலைமை

# இன்று கூட்டுறவில் இணைந்தமை அறவொழுக்க பேணலுக்கு உதவுகிறது

யாழ். மாவட்டத்தின் கூட்டுறவுச் சங்கங்கள் வளர்ச்சி பற்றி சில ஆண்டுகளுக்குமுன்னர் யாழ் வருகை தந்த முன்னைய இந்திய ஜனாதிபதி வி.வி. கிரி அவர்கள் மிகவும் பாராட்டியிருந்தார். தென்கிழக்காசியாவிலேயே யாழ் மாவட்ட கூட்டுறவுப் பணிகள் அவரை வெகுவாக கவர்ந்து இருந்தது.

கூட்டுறவுச் சங்கங்கள் என்றால் அவை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தான் என்று பொதுமக்கள் கருதுகிறார்கள். அந்தளவுக்கு இன்று அவை மக்களோடு பின்னிப் பிணைந்தமையே இதற்குரிய காரணிகளாகும்.

பொருட்களை மக்கள் பெறுவது ஒன்று சங்கங்களை நடாத்துவது வேறொன்று. இச் சங்கங்கள் யாழ். குடாநாட்டில் பல விதப்பட்ட விமர்சனங்களுக்கும் கண்டனங்களுக்கும் உள்ளாகியிருக்கின்றன.

சேவையைப் பெறும் அநேக மக்கள் இச்சங்கங்களை எடைபோடுவதற்கு ஏதோ ஒரு காரணம் உண்டு. அவர்கள் சுயநலம் தகுதியற்ற நிலையிலும் பதவிக்கு வரவேண்டும். என்ற பேரவா. அதிகாரத் துஷ்பிரயோகம் போன்றவை கூட்டுறவாளர் மனங்களின் தப்பபிப்பிராயம் ஏற்படுத்திக் கொள்கின்றது', என்று அறியமுடிகின்றது.

இதற்கு விதிவிலக்காக யாழ் மாவட்டத்தில் உள்ள சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அண்மைக்காலத்தில் அதன் 10வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடிசிறப்பான முறையில் மலர் ஒன்றை வெளியிட்டு இளம் தலைமுறையினரின் திறமைகள் வெளிக்கொணர்ந்தது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் சமாசத்தின் நோக்கங்களை சரியான முறையிலும் தமது கடமையை உணர்ந்தும் செயல்பட்டுள்ளார்கள் இதற்கு அவர்களின் மலர் ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பொதுவாக விழாக்களில் பேச்சுக்கள் இடம் பெறுகின்றன. ஆனால் ஓர் அமைப்பின் செயல்பாடுகளை கொணர்வது அவர்களால் வெளியிடப்பட்ட மலர் ஆகும். அந்த வகையில் சமாசத்தின் வெளியீடு மிகவும் பொருத்தமானதும் வரவேற்கத் தக்கதுமாகும்.

இதுவரை காலமும் கூட்டுறவுத்துறையில் பெறமுடியாத விபரங்களைப் பலரும் தெரிந்து கொள்ளக்கூடிய வகையிலும் இன்னும் கூட்டுறவுத் துறையில் ஈடுபடும் பிறர்க்கும் இம் மலர் ஏடு முன்னோடியாக அமைந்தது மட்டுமன்று, ஓர் அழுத்தத்தையும் கொடுத்துள்ளது. காலச் சூழ்நிலை சாதகமற்ற நிலையிலும் கடதாசித் தட்டுப்பாட்டிலும் மலர் எடுப்பாகவும், கவர்ச்சிகரமாகவும் அச்சிடப்பட்டுள்ளது

பலதரப்பட்ட ஆசிச் செய்திகள் சங்கங்களின் பெயர்ப்பட்டியல், கட்டுரைகள் ஆகியனவற்றை இம்மலரில் காணலாம். சமாசத்தின் எல்லைப் பரப்பிலுள்ள 14 பிராந்திய சபைகளைக் கொண்ட யாழ். மாவட்டப் படம் இம்மலருக்கு ஒரு தனிச் சிறப்பு.

மேலும் ஆசிரியர் குழுவின் பேனாவில் இருந்து மட்டும் என்ற கட்டுரையிலிருந்து ஒரு வார்த்தையை இங்கு குறிப்பிடல் பொருத்தமானதாகும்.

**எஸ். கே. ரி.**

''எமது கூட்டுறவாளரின் பற்று, ஆர்வம், விசுவாசம், நம்பிக்கை ஆகியவற்றுடன் தொழிற்படுகின்றனர், எப்படியிருந்தபோதிலும் கூட்டுறவு இயக்கத்தின் அற ஒழுக்க மூலதனத்தைக் கரைந்து போகவிடாது காப்பாற்றுவது அவர்களின் பாரிய பொறுப்பாகும்.''

இவ்வார்த்தைகள் என்றும் கூட்டுறவாளர் ஒவ்வொருவரினதும் தாரக மந்திரமாக இருக்கவேண்டும். இளைய தலைமை இன்று கூட்டுறவில் இணைந்தமை அறவொழுக்கப் பேணலுக்கு மேலும் உதவுவதை உறுதிப்படுத்துவதாகும் சிக்கனச் சங்க சமாச கூட்டுறவாளர்கள் தங்கள் சமாசத்தின் தலைமையை இளையவர்களிடம் ஒப்படைத்து மரபு முறையில் வந்தமை குறிப்பிடத்தக்கதும், வரவேற்கத் தக்க மனமாற்றமாகும்.

சமாசத்தின் தலைவர் ஆசியில் சமாசம் ஒரு துறவிபோல தான் கடந்து வந்த காலத்துச் சம்பவங்களை, சமூக அவலங்களை, அவசியங்களைத் தன்னளவில் மட்டும் இரைமீட்டுக் கொள்ளாது தமது சூழலிலிருப் போரும் தங்களைப் பற்றி என்ன நினைக்கிறவர்கள் என்று அறிவதற்காக இம்மலரின் இதழ்களை அகலவே திறந்து விடப்பட்டிருக்கின்றது. ஏனெனில் கோணல் பார்வை, மனச் சோர்வுக்கு வழி செய்கின்றது என்பதை நாம் சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறோம். எமக்கு தரப்பட்டிருக்கும் பாத்திரத்தை இயன்றளவுக்கு மேற்கொண்டிருப்பதாக எண்ணுகிறோம்.

இவ்வார்த்தைகள் மிகவாக கூட்டுறவாளர்களின் நெஞ்சை தொடுகின்றன. இது இளம் தலைமுறையினரின் திரு. ச. முருகநேசனின் பணிவான தலைமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இவற்றினை பிறசங்கங்களும் பின்பற்றின் நாடு நலம் பெறும்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. தே. ஜெயராமனினால் எழுதப்பட்ட கட்டுரை- நிறுவனங்களின் தலைமை வகித்தலின் பங்கு- மிகவும் பொருத்தமாகவும் ஓர் அணிகலனாகவும் மெருகூட்டுறது.

தலைமைத்துவம் என்றால் என்ன என்பதற்கு சரியான விடை இங்கே காணப்படுகின்றது. இதனை தலைமைத்துவம் வகிப்பவர்கள் தெரிந்து கொள்ளுதல் நன்று.

இக்கட்டுரையில் இருந்து இதோ ஒரு பகுதி-

''நிறுவனங்களின் தலைவர்கள், ஊழியர்களை சரியான முறையில் வழிநடத்தி இலக்கினை அடைவதற்கு சிறந்த தலைமைத்துவம் அவசியம். திறனற்று இயங்கிய பல நிறுவனங்களில் முகாமையை அல்லது தலைமையை மாற்றி அமைக்கும் போது குறிப்பிட்ட நிறுவனங்கள் திறமையாக இயங்கியதை அவதானிக்க முடிகிறது. நிறுவனத்தில் சிறந்த தலைமைத்துவத்தை பேண தலைவர் அல்லது முகாமையாளருக்கு வலு வேண்டப்படுகிறது. (Power) இந்த வலுவினை ஒருவர் துஷ்பிரயோகம் செய்ய முடியும். தலைமைத்துவத்தினை ஏற்க விரும்புவதற்கு பலகாரணங்களைக் கூறலாம். சிலர் வலுவினை பெற்றுக் கொள்வதற்கும் வேறுசிலர் அந்தஸ்தினை உயர்த்திக்கொள்வதற்கும் மேலும் சிலர் தங்கள் சுயவிருப்பங்களை அடைந்து கொள்ளும் பொருட்டும் ஏற்க விரும்பலாம். இதற்காக தலைமையினை விரும்பின் அவர் ஓர் சிறந்த தலைமைத்துவத்தைப் பேண முடியாது உண்மை. தலைமையை ஏற்கும் ஒருவர் நிறுவனத்தின் தலைமைத்துவத்தின் நோக்கினை அடைவதற்காக அல்லது பொது நோக்கின் கருமங்களை மேற்கொள்ளும் பொருட்டு தலைமைத்துவத்தினை ஏற்றல் வேண்டும்''

பொதுவாழ்வுக்குத் தம்மை அர்ப்பணிப்பவர்களுக்கு இக் கட்டுரை ஒரு வழிகாட்டி

(4-ம் பக்கம் பார்க்க)

# தமிழீழ மீட்புநிதி மீளளிப்பு நல்லூர் பிரதேச விபரம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்பு நிதிக் கடன் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தோரின் கடன் மீளளிப்புத் திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் பத்திரதாரரின் விபரம் வருமாறு:-

நல்லூர் 1992:-

மாசி:

யா/ந/18, யா/ந/142, 277 334, 844, 3124, 4050, 4265, 5780, 6013.

பங்குனி;-

219, 381, 1472, 2083, 2351, 2517, 2584, 3581, 4109, 4792.

சித்திரை-:

98, 372, 580, 1090, 2125, 3755, 3797, 5246, 5580, 5875.

வைகாசி:-

234, 386, 401, 785, 866, 1781, 2627, 3541, 4552. 5206.

ஆனி:-

64, 464, 1215, 1692, 2437, 3136, 4269, 5113, 5392, 5528.

ஆடி:-

214, 310, 362, 573, 612, 875, 892, 2003, 5482, 5623.

ஆவணி

197, 744, 822, 825, 1668. 1767, 2464, 2589, 2905, 5569.

புரட்டாதி

103, 223, 232, 684, 721, 943, 2712, 3329, 4827, 5733.

ஐப்பசி:

81, 287, 826. 964, 1481, 2806, 4243, 4436, 4842. 5508,

கார்த்திகை:

33, 792, 1240, 1582, 2633, 3343, 4650, 5034, 5175, 5936.

## தலைவராக தெரிவு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி மேற்கு தென் மூலையைச்சேர்ந்த திரு.கொன்சன்ரைன் முத்துராசா அச்சுவேலி கிராமிய உற்பத்திக் குழு தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## இலவசம்

(யாழ்ப்பாணம்)

கால்நடைத் தீவனமாகவும் விறகாகவும் பயன்படும் இப்பில் இப்பில் வளர்க்க விரும்புவோர் ரூபா 2/- அஞ்சல் முத்திரை மில்க்வைற் நிறுவனத்திற்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இன்று

(உடுவில்)

கந்தரோடை அருள்மிகு வற்றுக்கை அம்மன் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை கார்த்திகை சோமவாரத் திருவிழா நடைபெறுகின்றது. அபிடேகம், விசேட பூசைகளை தொடர்ந்து மாலை 4 மணிக்கு திரு. அ. தற்பரானந்தன் தலைமையில் மருதனாமடம் இராமநாதன் கல்லூரி முன்னாள் அதிபர் 'செந்தமிழ்செல்வி' திருமதி இ. மங்கையர்க்கரசி ''சோமவார விரதமகிமை'' பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (109)

## மாவீரர் வார ஏற்பாடுகள்

### அலங்கார வளைவுகள்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் வட்டவைப் பிரதேசத்தில் மாவீரர் வாரத்தை சிறப்பாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

முக்கிய சந்திகளில் பத்து அலங்கார வளைவுகளை நிறுவும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வீதி ஓரங்கள் மக்களால் புல் பூண்டுகள் வெட்டப்பட்டு துப்பரவுசெய்யப்பட்டு வருகின்றது. அலங்காரப் பந்தல்களை நிறுவுவதற்கும் பொது நிறுவனங்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன. (72)

### வீதி துப்பரவு

(கொழும்புத்துறை)

மாவீரர் தினத்தை முன்னிட்டு தொல்புரம் மத்திய சனசமூகநிலையம் வாசிகசாலையின் அங்கத்தவர்கள் ஒன்று சேர்ந்து இப்பகுதியில் உள்ள பெரிய வீதியை சிரமதானப் பணிமூலம் செய்வதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. (154)

### சிரமதான பணிகள்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் மாவீரர் வாரக் கொண்டாட்டங்களை முன்னிட்டு சிரமதானப் பணிகள், வீதிகள் திருத்தல், மரம் நாட்டல் போன்ற பல பணிகளை மக்கள் இணைந்து செய்து வருகின்றனர். (154)

## ஐயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

சுவாமி பிரேமானந்தாஜியின் 41வது ஜயந்திவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் உடுவில் கிழக்கு கடவுள் சுவாமிகள் சமரச சன்மார்க்க பிரேமானந்த நிலையத்தில் செல்வி மலர் பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும். பூஜைகளும், ஆராதனைகளும், பஜனைகளும் அன்று இடம்பெறும்.

## வெளியீட்டு விழா

(நல்லூர்)

உடற்கல்வி ஆசிரியர்களுக்கான கைநூல் வெளியீட்டு விழா பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் கலாசாலை அதிபர் ஆர். எஸ். நடராஜா தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக யாழ். உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் த. அருணகிரிராஜா கலந்து கொண்டார்.

விரிவுரையாளர் சி. எஸ். அருட்பிரகாசத்தினால் வெளியிடப்பட்ட இக்கைநூலின் முதலாவது பிரதியை மாணவ மன்றத் தலைவர் சி. முருகானந்தன் பெற்றுக்கொண்டார். (158)

★ தமிழீழ மாவீரர் நாள் — 1992

## மாவீரர்களே!

உங்களைப் புதைத்தமண் உறங்காது
உரிமைகள் பெறும்வரை கலங்காது
எங்களின் தாயகம் விடிவுபெறும் — புலி
ஏறிய கொடியுடன் ஆட்சி வரும்.

— தமிழீழ மாவீரர் பணிமனை

## 2 வயதுக் குழந்தையுடன்
# இளந்தாய் கிணற்றில் குதித்து தற்கொலை

(யாழ்ப்பாணம்)

குடும்பத்தகராறு காரணமாக இளம் தாய் ஒருவர் தனது குழந்தையை கிணற்றில் தூக்கிவீசிவிட்டு தானும் கிணற்றில் குதித்து தற்கொலை செய்துகொண்டார்.

இப்பரிதாப சம்பவம் கோப்பாய் மத்தியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

திருமதி வடிவாம்பிகை (33 வயது) இவரது இரண்டு வயது பெண் குழந்தையான மனோவர்மணி ஆகியோரே இச்சம்பவத்தில் இறந்தவர்களாவார்கள்.

இதே இடத்தில் வசித்து வந்த திருமதி தனலஷ்மி (52 வயது) என்பவரும் இதே தினத்தில் கிணற்றில் வீழ்ந்து பலியானார். (சு)

### இளைய தலைமை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யாக அமைந்துள்ளது. அத்துடன் யாழ். மாவட்ட சிக்கன சங்கத்தின் இளைய தலைமுறையினரின் செயற்பாடுகள் பிற சங்கங்களுக்கும் ஓர் முன் உதாரணமாக அமையுமெனக் கருத இடமுண்டு.

### எம்மை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரையறுக்கப்பட்ட எல்லைகள் உண்டு. பாரம்பரிய மொழி, எமது கலை, பண்பாடு பொருளாதார வளம் பாரம்பரியமாய் எமக்குண்டு ''எம்மை எமக்கே உணர வைத்தவர்கள் மாவீரர்கள்.'' ஆம். எமது இனம் சுயநிர்ணய உரிமைகளுக்குத் தகுதியுடையதே.'' உலகின் முகட்டையே உலுப்பினர் எமது மாவீரர்கள்

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டச் செயலக அரசியல்துறை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ''எமக்கு நிலத்தின் ஓரங்குலத்தைக்கூட எதிரியே உனக்கு விட்டுத் தரோம். எமது உரிமைகளின் எவ்வளவிலும்கூட உனது கை விழமுடியாது'' பேசாத இந்த வார்த்தைகளை, வீரத்தின் வழியே வெளிப்படுத்தி நின்றனர் மாவீரர்கள்.

எதிரி ஓட்டமாய் ஓடுகிறான் ஒவ்வொருநாடாய் கையேந்தி நிற்கிறான் எல்லையைக் காப்பாற்ற எனக்கு நிதி கொடுங்கள் என்று பிச்சை கேட்கின்றான். இது எமது மாவீரர்களின் சாதனை. மாற்றார் உரிமையில் நகம் பதிக்க நினைக்கும் ஒவ்வொரு எதிரிகளுக்குமே போதிக்கப்பட்ட பாடம்.

எங்கள் மாவீரரின் நினைவுகள் ''விடிவு'' பற்றிய நம்பிக்கைகள் திடப்படுத்தப்படுகின்றன. எமது நாசிகள் சுகமான காற்றை உணர்கின்றன.

### ஹமீத்தின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு திரும்பி அமைச்சர் ஹமீத்தைச் சந்தித்தது.

இச்சந்திப்பின்போது புலிகளின் தற்போதைய நிலைப்பாடு குறித்து விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டது. இதையடுத்தே தற்போதைய சமாதான முயற்சி தேக்கமடைந்திருப்பதால் விடுதலைப்புலிகளுடன் மீண்டும் ஒரு சுற்றுப் பேச்சுக்களை நடாத்துமாறு அமைச்சர் ஹமீத் 'குவேக்கர்ஸ்' குழுவிடம் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதையடுத்து 'குவேக்கர்ஸ்' சமாதானக் குழுவினர் மீண்டும் யாழ்ப்பாணம் வரலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (சி)

### மண் மீட்பு நிதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மீளளிப்புச் செய்யப்படும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கான நிதியை முழுமையாக மக்கள் மீது சுமத்தாமல் இருப்பதற்காக, கடன் திட்டத்தின்கீழ் பெற்ற நிதியை விடுதலைப் போராட்டக் காலத்திலேயே மீளளிப்புச் செய்துவருகிறோம்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காகப் பெருமளவில் நிதி தேவைப்பட்டது. இந்த நிதியை மக்களிடம் நன்கொடையாகப் பெறுவதன் மூலம், அவர்கள் மீது ஒரு பளு சுமத்தப்படுகிறது. இதன் காரணமாகத் திருப்பிக் கொடுக்கும் நோக்குடன் நாம் பெற்ற கடனை மீளளிப்புச் செய்கிறோம்'' (வீ)

## மரண அறிவித்தல்

### முத்துக்குமாரு பரமலிங்கம்

ஊர்காவற்றுறை கரம்பன் கிழக்கை பிறப்பிடமாக கொண்டவரும் தற்போது பிரதான வீதி 288 இலக்கத்தில் வசித்தவருமான முத்துக்குமாரு பரமலிங்கம் 15-11-92 ஞாயிறு பி. பகல் 2 மணியளவில் காலமானார். அன்னார் காலம்சென்ற பராசக்தியின் அன்பு கணவரும், அம்பலவாணர், திருமதி குமாரசாமி மகேஸ்வரி (அருள்மணி, கனடா), காலஞ்சென்ற சிவலிங்கம், இராமலிங்கம், சிவயோகம், பேரம்பலம். ஆகியோரின் அன்புசகோதரனும் பரமநாதன், பரஞ்சோதி, ஈஸ்வரன் பத்மாதேவி, பரமேஸ்வரி பார்வதி, இரத்தினேஸ்வரி, விமலாதேவி, பவானி ஆகியோரின் அன்பு தகப்பனும், தவச்செல்வம், தனலட்சுமி, மனோகரன், விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனுமாவாவர். சுகிதா. சுதர்சன், சுதர்ஷா, மதுஷன் காயத்திரி, சிறிகரன், தியாககரன், சுவிதா ஆகியோரின் அன்பு பேரனுமார் அன்னாரின் பூதவுடல் நாளை 16-11-92 திங்கள் 12 மணியளவில் 288, பிரதான வீதி இல்லத்தில் இருந்து தகனக்கிரிகைக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. தவச்செல்வம்
(மருமகன்)

வேலணை மேற்கு,
வேலணை.

(சி-6977)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு நவம்பர் மாதம் 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registerrd as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B/I0336/8

### போர் நிறுத்தம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

அண்மையில் யாழ். வந்த இக்குழுவினர் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையில் போர் நிறுத்தம் கொண்டு வருவதற்காக முயற்சிகளில் ஈடுபட்டதாகவும் இரு பகுதியினருக்கும் இடையிலான கட்டுப்பாடுகள் பற்றி இணக்கம் ஏற்படாமையினால் இந்த போர் நிறுத்த முயற்சி தடைப்பட்டதாக மேலும் அச்செய்திகள் தெரிவிக்கப்பட்டது.

### மழை

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தில் மட்டும் பத்தாயிரம் பேர் வரைஅகதிகளாகி வீடுவாசல்களை விட்டு பிற இடங்களில் தஞ்சமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரத்தினபுரியில் 10, 600 குடும்பங்களும் அம்பாறை மாவட்டத்தில் 400 வீடுகளும், 4000 ஏக்கர் நெல்வயல்களும், பதுளை மாவட்டத்தில் 592 குடும்பங்களும், களுத்துறை மாவட்டத்தில் 340 குடும்பங்களும் புத்தளம் மாவட்டத்தில் 160 குடும்பங்களும் கொழும்பில் 600 குடும்பங்களும் வீடுவாசல்களை விட்டு அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்துக்கு இரண்டு கோடி ரூபாவும் இரத்தினபுரி மாவட்டத்துக்கு 1 கோடி 80 லட்ச ரூபாவும், அம்பாறை மாவட்டத்துக்கு 4 கோடி 10 லட்ச ரூபாவும், பதுளை மாவட்டத்துக்கு 9 கோடி 10 லட்சம் ரூபாவும் ஒதுக்கியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (சி-சு)

### மாவீரர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறும் கருத்தரங்குகள்,

வலிகாமம் கோட்டம் உடுவில்-உடுவில் மத்தாளோடை ச. ச. நி, சங்கானை - தொல்புரம் மத்தி ச. ச. நி, நல்லூர் மூத்த விநாயகர் ச ச நி, கோப்பாய் - உரும்பிராய் ஞான வைரவர் ச ச நி

வடமராட்சி கோட்டம் சரவெட்டி அச்சுவேலி ம. வி

தென்மராட்சி கோட்டம்: கைதடி - குமாரநகர் ச ச.நி கொடிகாமம் - கிளாலி சிவா ச ச. நி பளை கேசவன். தமிழ்ச்செல்வன். அப்பன் ஞாபகார்த்த பாலர் பட சாலை சாவகச்சேரி - மட்டுவில் கிழக்கு மோகனதாஸ் ச,ச நி.

தீவக கோட்டம் - கெற்பெலி பண்டிதர் குடியிருப்பு - நாவற்குழி லவனிதா குடியிருப்பு.

கடற்புலிகள் கோட்டம் - தாளையடி - தாளையடி றோ. த. க. பாடசாலை வடமராட்சி கிழக்கு ஆதிகோவிலடி ச. ச, நி, வல்வெட்டித்துறை சந்தி ச ச நி.

மாணவர் அமைப்பு - மருதனாமடக் கோட்டம் - சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மண்டபம்.

கடற்புலிகள்- வலிகாமம் கிழக்கு-கல்யாண மண்டபம், ஈச்சமோட்டைச் சந்தி, சுண்டுக்குழி ச. ச நி.

சிரமதானம் நடைபெறும் இடங்கள்; தீவகம்-நாவற்குழி லவனியா குடியிருப்பு, வடமராட்சி- மூத்தவிநாயகர்கோவிலடி, வலிகாமம்- சங்கானை-தொல்புரம் வழக்கம்பரை வீதி. கோப்பாய்-ஆவரங்கால் சந்தையடி வாய்க்கால் உடுவில்-புன்னாலைக் கட்டுவன் தெற்கு வைத்தியசாலை, மத்தாளோடை உள்வீதி.

கடற்புலிகள்- வலிகாமம் கிழக்கு-நாவலடிச்சந்தை. பூம்புகார் வீதி, வடமராட்சி கிழக்கு-உடுத்துறை ம. வி. செம்பியன்பற்றிலுள்ள வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா.

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு-வடமராட்சி கல்விக் கோட்டம் - பருத்தித்துறை வடஇந்துமகளிர் கல்லூரி (நினைவுக்கூட்டமும், கலைநிகழ்ச்சியும் இடம்பெறும்).

### பிரச்சினைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சமய சமூக அமைப்புகள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

மோர்ஜ் அமைப்பின் ஆதரவில் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கத்தோலிக்க, பௌத்த குருமார்கள், மற்றும் சமய சமூக தலைவர்கள் கலந்து கொண்ட கருத்தரங்கு ஒன்றிலே அரசிடம் இவ்வாறு வற்புறுத்தும் தீர்மானம் எடுக்கப்பட்டது

கத்தோலிக்க ஆயர்கள் நடாத்திய மாநாடு ஒன்றிலும் இக்கோரிக்கை எழுப்பப்பட்டது. (ரி)

### தெரிவுக் குழு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதில்லை என்ற தெரிவுக் குழுவின் முடிவு தவறானதென்று டலர் கருதுவதாகவும் பி பி ஸி. மேலும் தெரிவித்தது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகின்றபோதிலும், அதனால் இது வரையும் எதனையும் சாதிக்க முடியவில்லை

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் எந்த முயற்சியிலும் விடுதலைப் புலிகள் பங்குபற்றுவிடின், அது தோல்வியிலேயே முடியுமென்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ரி-சு)

### தாக்குதலைத்

(1-ம பக்கத் தொடர்ச்சி)

வுளதாகக் கூறப்படுகிறது.

இலங்கை அரசு போர் விமானங்களை வாங்கவும், ஆயுதங்களைப் பெறுவதிலும் பிரான்ஸ் நாட்டின் உதவியை பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆர்ஜன்டீனா நாட்டிலிருந்து 'முக்தாரல்' எனப்படும் போர் விமானங்களை விற்பனை செய்வதற்காக ஆர்ஜென்டீனா நிறுவனப் பிரதிநிதிகள் கொழும்பு வந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

பிரான்ஸ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட ஹெலிகொப்டர்களை இலங்கை அரசு வாங்கியதும் தற்போது இலங்கை விமானப்படை பயன்படுத்தும் போர் விமானங்கள் மாற்றப்பட்டு விடுமென்றும் கூறப்படுகிறது.

முன்னதாக சீனாவிடமிருந்து வாங்கப்பட்ட போர் விமானங்கள் பல பழுதாகியும், இயந்திரக்கோளாறு காரணமாகச் சரியாக இயங்கவில்லை என்று கூறப்படுவதால் சீனாவிடமிருந்து மேலும் போர் விமானங்களை வாங்க, இலங்கை விரும்பவில்லையென்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (சு)

### கிழக்கு படை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள், படைத் தளபதிகள் சகிதம் நேற்று முன்தினம் கிழக்கிற்கு விஜயம் செய்தார்.

அமைச்சருடன் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலர் ஏயர் சீவ் மார்ஷல் வோல்டர் பெர்னாண்டோ, எம்.பிக்களான ரி. ஏ. சூரியாராச்சி. ஆர். எம். பி. சிறிசேன, சந்திரமன் டி சில்வா. எஸ். ஏ. அப்துல் மஜீத் மற்றும் முப்படைகளின உயர் அதிகாரிகளும் கிழக்கே விஜயம் செய்தனர்

இவர்கள் வாழைச்சேனை, வெலிக்கந்தை, பலிய கொடல, சிங்கபுர, புனானை பகுதிகளிலுள்ள படைமுகாம்களுக்கும் மியான்குளம் அணைக்கட்டு இடம், தன்னாமுனைச்சந்தியிலுள்ள இராணுவப் பிரிவுகளுக்கும் விஜயம் செய்து துருப்புக்களின் நிலைமையைப் பார்வையிட்டனர்.

அமைச்சருடன் கிழக்கு மாகாண தளபதி பிரிகேடியர் லக்கி அல்கம, பிரிகேடியர் ஜெயக்கொடி, சிரேஷ்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மித்திரா ஆரியசிங்க, பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரஞ்சன் ஆகியோரும் சென்றிருந்தனர். (சி)

## அதிபர்கள் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாள் தொடர்பாக அதிபர்களுக்கான கலந்துரையாடல்கள் கல்விக் கோட்டமட்டங்களில் நடைபெறவுள்ளது.

யாழ் கல்விக் கோட்டம் இன்று திங்கட்கிழமை மு. ப. 10-30 மணிக்கு யாழ் இந்து குமாரசாமி மண்டபத்திலும், பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டம் பி. ப. 2-00 மணிக்கு யாழ். மானிப்பாய் இந்து கல்லூரி மண்டபத்திலும் வேலணைக் கல்விக் கோட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பி ப 1-00 மணிக்கு ஊர்காவற்றுறை கொத்தணிப் பாடசாலையிலும் (சென் ஜோன் எக்கடமி) மருதனாமடக் கல்விக் கோட்டம் 18-ம் திகதி புதன்கிழமை பி. ப. 2-30 மணிக்கு யா/இராமநாதன் கல்லூரி மண்டபத்திலும், தென்மராட்சிக் கல்விக் கோட்டம் 18-ம் திகதி புதன்கிழமை மு. ப 10-00 மணிக்கு யா/சாவகச்சேரி றிபேக் கல்லூரி மண்டபத்திலும், வடமராட்சிக் கல்விக் கோட்டம் 17-ம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 2-30 மணிக்கு யா/வேலாயுதம் மகாவித்தியாலயம் மண்டபத்திலும் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

### யாழ்ப்பாணத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ளனர்.

இறக்குமதி செய்யப்பட்ட நவீன ரக ஆயுதங்களைப் புலிகளுக்கு எதிரான போரில் படையினர் பயன்படுத்தியும் இந்த யுத்தத்தில் வெற்றி காணமுடியவில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

போர் நீண்டகாலம் தொடருமானால், படையினரால் தாக்குப்பிடிக்கமுடியாத நிலை ஏற்படும் என்றும் அவர்கள் அச்சம் தெரிவித்தனர். (ரி)

### கொழும்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

இந்த எக்ஸ்போ -92 ஏற்றுமதி கண்காட்சி பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில்நாளை மறுதினம் புதன்கிழமை ஆரம்பமாகிறது இக்கண்காட்சி ஒருவாரம் நடைபெறும்.

இதில் கலந்து கொள்ள பெருமளவு வெளிநாட்டு முதலீட்டாளர்களும், வர்த்தகர்களும், உல்லாசப்பயணிகளும் வருகை தருவதால் சகல பகுதிகளிலும் படையினர் உஷார் படுத்தப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

### தமிழருக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. பெரினுட் சொய்சா கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது;

ஸ்ரீலங்கா அரசு இனப்பிரச்சனையைத் தீர்த்துவைக்காது. யுத்த நடவடிக்கைகளை தொடர்ந்து நடாத்தி வருவதால் நாடு வங்குரோத்து நிலைக்கு சென்றுகொண்டிருக்கிறது.

அரசு மேற்கொண்டுவரும் யுத்தநடவடிக்கைகளால் உயிர் உடமைகள் அழிக்கப்படுகின்றன யுத்த சூழலில் வாழும் தமிழர்கள் பல ஒப்பந்தங்கள் மூலம் இலங்கையில் ஏமாற்றப்பட்டு வந்துள்ளனர். இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினை தீர்க்காது ஸ்ரீலங்கா அரசு தட்டிக்கழித்து வருகின்றது.

இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. தமிழர்களின் உரிமைகள் கட்டாயம் வழங்கப்படவேண்டும். (சு)